தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] தி. பி, 2017 கும்பம் (20-2-1987) 85 காசுகள் (இதழ் எண்: 81) [பகுதி 43-44

கையைத் திருகாதே என்றால் கழுத்தைத் திருகுகிறது தில்லி அரசு

இந்தியை எதிர்க்க எதிர்க்க, திணிப்பு மேலோங்குகிறது!

இந்தித் திணிப்புக்கு நிலையான ஒரு தீர்வு வேண்டும்!



வடவரின் இந்தித் திணிப்பைத் தமிழகமும் பிற ஓரிரு மாநிலங்களும் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டே வந்தாலும், தில்லியரசு மேலும் மேலும் இந்தியை அனைத்து மக்கள் மூளைகளிலும் திணிக்க புதுப்புது வழி முறைகளைக் கையாண்டு வருகிறது.

மாலையில் இரண்டு மூன்று மணி நேரமே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாநில மொழிகளுக்கு இடங்கொடுக்கப்பெற்று வந்தது. பிறகு நள்ளிரவு வரை இந்தி இந்திதான்! இதற்குத் தக தொலைக் காட்சி வாய்ப்பை வேறு பரவலாக்கிக் கொண்டனர். இந்தி, விளையாட்டு, விளையாட்டு, இந்தி- என்று மாறி மாறி மக்கள் மனத்தையும் மூளையையும் சலவை செய்கிறது இராசீவ் அரசு!

இப்பொழுது மாலை, இரவு நிகழ்ச்சிகள் போதா வென்று, காலை நிகழ்ச்சியும் தொடங்கப் பெற்று விட்டது. அதிலும் இந்திச் செய்தி, இந்திப் பாடல், சுப்ரபாதம், மதம் இவைதாம் முதன்மையாக ஒளி பரப்பப் பெறுகின்றன. 45 நிமையத்தில் 10 நிமையமே ஆங்கிலச் செய்தி. இந்திச் செய்தியை முன்பே எதிர்த்தது தமிழகம். பிறகு தவிர்க்கப்பட்டது. இப்பொழுது காலம் பார்த்து மீண்டும் காலை வேளையிலேயே மூளையில் திணிக்க ஏற்பாடு செய்து கொண்

Scanned with CamScanner

ஐயோ தமிழகமே!

தமிழக முதல்வர் ம. கோ இராமச்சந்திரன் செல்லுமிடங்களில் எல்லாம் மழைபெய்து வளம் கொழிக்கும் என்று அவரைத் தேர்ந்தெடுத்த மக்கள் உள்ளிட்ட அமைச்சர் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் அவருடைய தொகுதியான ஆண்டிபட்டிப் பகுதியில் வறட்சி மிகுதியால் மக்கள் ஊர்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்பது செய்தி. யார் செய்த கரிசோ? (பாவமோ?)

0 0 0

கருநாடகத்தில் காவிரி ஆற்றின் மீது 'மேகதாட்டுப் புனல் மின்திட்டம் மேற்கொள்ளப் பெறுகிறது. செலவுத் திட்டம் உருபா 450 கோடி. அளவைப் பணிகள் அனைத்தும் முடிந்து விட்டன. தமிழ்நாடு அரசு இதற்கு மறுப்புத் தெரிவித்தது. ஆனால் கருநாடக அரசு கொஞ்சங்கூடப் பொருட்படுத்த வில்லையாம்! இனி பொருட்படுத்தப் போவதும் இல்லையாம்!

0 0 0

'87 ஏப்பிரல் முதல் நாளிலிருந்து அண்ணா போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்படுமாம். அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் புதிதாகத் தோன்றுகிறதாம்! காவிரி அன்னையைக் காக்க முடியாவிட்டாலும் பெற்ற அன்னையின் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம் தொடங்கப் பெறுகிறதே! அது போதாதா?

0 0 0

'இந்தியைத் தடுத்து நிறுத்த எம். சி. ஆரே போதும். அவர் குரலுக்கு(?) 'மரியாதை' உண்டு. அவர் உள்ளவரை இந்தி தலைகாட்டவே முடியாது.' - இவ்வாறு சுலோசனா சம்பத் மனமார உளறியிருக்கிறார். அடிமைத்தனம் எவ்வாறு செயல்படுகிறது பார்த்தீர்களா?

0 0 0

"இராசீவ் அருளால் எம். சி. ஆர் முதல்வராக இருக்கிறார். அ. தி. மு. க. ஆட்சிக்குச் சாவு மணி அடிக்கப்படும். 1987க்குப் பின் பேராயக் கட்சி தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வரும். ஐயமில்லை!" - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இராசேசுவரன் (இந்திராப் பேராயம்) கூறியிருக்கிறார். இதற்கு 1987 உடன் இராசீவின் அருள் வறண்டு விடப் போகிறது என்பது பொருளா? அல்லது எம். சி. ஆர். உயிரோடிருக்கும் வரை இராசீவின் அருள் இருக்கும் என்பது பொருளா?...ம். எப்படியோ? ஆனால் ஒன்று மட்டும் உண்மை. பாதுகாப்புடையும், படையும், அருள்புரியும் வரை இராசீவ் தலைமையமைச்சராக இருப்பார்.

0 0 0

இராசீவும் செயவர்த்தனவும் திட்டமிட்டு நாடகம் நடத்துகிறார்கள். ஈழத்தில் தமிழினம் முழுவதும் அழியும்வரை இந்நாடகம் தொடர்ந்து நடக்கும். இது வரை நண்பர்கள் போல் நடித்துக் காட்டினர்; இப்போது பகைவர்கள்போல் நடிக்கும் கட்டம் வந்திருக்கிறது. இந்த நாடகத்தைத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் தூங்கி வழிந்து கொண்டு பார்த்துக் கொண்டே இருக்கலாம்!

0 0 0

'தமிழ்மொழியையும் இனத்தையும் காக்க முடியாவிட்டால் 5 கோடித் தமிழர்களும் ஒரே நாளில் தூக்குப் போட்டுச் சாகலாம்' என்று கலைஞர் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார். தூக்குப் போட்டுச் சாகிறவர்களில் கலைஞர் இருப்பாரா? தெரியவில்லை!

0 0 0

'87 மார்ச்சு 14-இல் கச்சத் தீவில் தமிழக மீனவர்களுடன் சென்று கொடியேற்றப் போவதாக அறிவித்திருக்கிறார் திரு. சுப்பிரமணியசாமி. கடற்படைத் தளபதி நெடுமாறன் போல் இருந்துவிடக் கூடாது. கடல் நடுவே 'சூரவன்மனை' வென்ற சுப்பிரமணியசாமியாகவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

0 0 0

-வணங்காமுடி.

வாழ்க தேசிய ஒருமைப்பாடு!

• தமிழ்நாட்டிற்கு முதலிடம்!

இந்தியத் துணைக் கண்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள் அதிகமாக இருப்பதில் முதலிடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது என்ற செய்தி இந்திய அரசின் ஆய்வறிக்கையிலிருந்து தெரியவந்துள்ளது.

வறுமைக்கோடு என்பது ஒரு மாந்தனுக்கு ஒரு நாளுக்கு 2000 கலோரி திறனை (energy)த் தருவதற்குத் தேவைப்படும் உணவினை வாங்குவதற்குத் தேவைப்படும் குறைந்த அளவு வருவாய் (Minimum income). இத் தொகை 1983 விலையில் உரு. 2.00 (மாதம் உரு 60-00)

இந்த 2 உருபா கூட கிடைக்காமல் உள்ள மக்கள் தொகை தமிழ்நாட்டில் 60 விழுக்காடு உள்ளதாம். தமிழ்நாட்டினைச் சுரண்டிக் கொழுக்கும் தில்லி பார்ப்பன வணிகக் கூட்டம், பன்னாட்டு முதலாளிகள், இந்தியத் தேசிய முதலாளிகள் திரவிடத் தேசிய முதலாளிகள், தமிழ்த் தேசிய முதலாளிகள் கூட்டங்களை இத் தமிழன் வீழ்த்தாதவரை அவனுக்கு விடிவில்லை — என்பது தெளிவாகத் தெரிகிறதில்லையா?

-குணத்தொகையன்.

திரவிட மருநன்

அண்மையில் சென்னை சூளைமேட்டில் நடந்த துமுக்கிச் சூட்டினை மார்ச்சிச்டுக் கட்சி வி. பி. சிந்தன் (மலையாளி) கண்டனம் செய்தும் போராளிகளின் கருவிகளைப் பறித்துவிட வேண்டும் என்றும் துமுக்கிச் சூடு நடந்த அன்றே மிக வேகமாக ஓர் அறிக்கை வெளியிட்டார். (ஈழத் தமிழர்களுக்கு இன்னல் நேர்ந்த பொழுதெல்லாம் வாய்மூடிக் கிடந்தவர்தாம் இவர்.)

இதனைத் தொடர்ந்து ஆங்கிலச் செய்தித்தாளில் (Indian Express) கொச்சி போன்ற ஊர்களிலிருந்து ஒரிருவர், 'ஆசிரியர்க்குக் கடிதம்' பகுதியில் எழுதி

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்'
உணர்வும், உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும் ! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும் ;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்
துணையாசிரியர்கள:
தென்மொழி மா. பூங்குன்றன்,
தென்மொழி கல்லை. அருட்செல்வன்,
தென்மொழி மா. பொழிலன்,

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
ம. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்,

கட்டுரையாசிரியர்:
பாவலர். கடவூர் மணிமாறன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து தமிழவேள்,

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்,

அச்சீட்டாளர்:
திருவாட்டி. தாமரை பெருஞ்சித்திரனார்
தென்மொழி நின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச்செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. கா. இளமாறன்,

கழக அருட்கொடையாளர் :
தென்மொழி. ந. முத்துக்குமரன்
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. த. அரிமாவளங்கோ
எசு. ஆர். பிரான்சிசு

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக்கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	100-00
வாழ்நாள் ,,	750-00	500-00	3500-00

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

தமிழ்நிலம்
உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு
சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4) இதழ் எண்-81 (20-2-1987) (பகுதி42-43)

பார்ப்பனர்க்கு இரட்டைக் கொம்பு!

இன்றைய நிலையில் தமிழினத்தை ஒட்டுமொத்தமாக மதிப்பிட்டுக் காட்டுவதற்குக் கலைஞர் கருணாநிதி ஒருவரின் வலிவு மெலிவுச் செயல்களே அடிப்படையாகப் பார்ப்பனர்களால் எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன என்றால், பார்ப்பன இனத்தை ஒட்டு மொத்தமாக மதிப்பிட்டுக் காட்டுவதற்கு 'துக்ளக்' ஆசிரியர் சோ அய்யரையே எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். சரியாகவோ தவறாகவோ கருணாநிதி செய்யும், செயல்களே இவருடைய எழுத்துக்கும், துக்ளக் விற்பனைக்கும் அடிப்படைகளாக அமைந்திருக்கின்றன. கருணாநிதியைப் பற்றி ஒரு கட்டுரையோ பகடிப் படமோ (கார்ட்டூனோ) இல்லாமல் துக்ளக் வந்ததில்லை. அவ்வாறு வந்தாலும் அது விற்காது. எனவே இந்த உத்தியைக் கடைப்பிடித்தே, கருணாநிதியைப் பற்றி எழுதி அவர் தொண்டர்களிடத்திலேயே இதழை விற்பனை செய்து வணிகம் செய்வது 'துக்ளக்' சோவிற்கு இருக்கும் வேறு எந்தத் திறமையையும் விட, கூடுதலான திறமையாகும்.

அண்மையில் தி. மு. க. நடத்திய இந்தியெதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றி வேறு யாரும் கவலை கொண்டதை விட, துக்ளக் சோ அய்யர் அதிகமாகக் கவலை கொண்டார் என்பதற்கு அப் போராட்டக் காலத்தில் வெளியான துக்ளக் இதழ்களே சான்றாக நிற்கும். இந்திப் போராட்டம் எந்த வகையிலும் வெற்றி பெற்று விடக் கூடாது என்று சோ மிகமிகக் கவலைப்பட்டார் என்பதை அவர் எழுத்துகளிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அது எங்கு வெற்றிபெற்று விடுமோ, பார்ப்பனர்களுக்கு எங்கு தோல்வி தொடங்கி விடுமோ என்னும் அச்சமும் கவலையும் அவரை மிகுந்த பரபரப்புக்குள்ளாக்கியிருக்கின்றன. எனவே இந்தியெதிர்ப்புப் போராட்டத்தின் ஒவ்வோர் அசைவையும் திருப்பத்தையும் அவருடைய முட்டை போன்ற கண்ணாடிக் கண்களால் நன்றாக ஊன்றிக் கவனித்துக் குத்தித் தோண்டி முகர்ந்து பார்த்துக் குதறியெடுத்திருக்கிறார். வெறுமனே படுத்திருக்கும் நாட்டு நாய்க்கு ஓர் எலும்புத் துண்டு கிடைத்து விட்டால் எவ்வாறு அது தாடை தேயக் கடித்துக் கொண்டு கிடக்குமோ, அப்படி துக்ளக் சோ அய்யருக்கு இந்தியெதிர்ப்பு எலும்புத் துண்டு கிடைத்தவுடன் அதை இன்னும் விடாமல் மென்று கொண்டு கிடக்கிறார். பார்ப்பனரில் அவர் ஒரு தனி வகை. காரம் குறையாத மூல (ஒரிஜினல்) பார்ப்பனிய ஆரிய முத்திரை (Brand), அவர்.

இராசாசி போன்ற பார்ப்பனர்தம் உளறல்களைத் தவிர, வேறு தமிழினம் சார்ந்த எவருடைய கருத்துகளையும் சிந்தனை என்று ஏற்றுக் கொள்ளாத இனத்தின் மூல உருவமாகிய துக்ளக் சோ, இந்தியெதிர்ப்பையொட்டிக் கருணாநிதி மேல் வீசிய கணைகளுக்குப் பெரியார் சிந்தனைகள்- மூன்றாந் தொகுதியும் பயன்பட்டிருக்கின்றது என்பதை வைத்து, அவ்வினம் நம்மவரின் கைகளைக் கொண்டே

Scanned with CamScanner

நம்மவரின் கண்களைக் குத்திக் குருடாக்கும் சாணக்கிய சூழ்ச்சிக்கு முழுக் குத்தகையெடுத்துள்ளது என்பதை முழு உண்மையாகக் கொண்டு விடலாம்.

தி. மு. க. வின் இந்தியெதிர்ப்புப் போராட்டம் தொடக்கத்தில் அமர்க்களப் படுத்தப் பட்டதாம். இறுதியில் கோமாளித் தனத்தின் உச்சியை எட்டிப் பிடித்து விட்டதாம். இவற்றைக் குறிப்பிட்டுவிட்டுப் போராட்டத்தின் தன்மை என்ன என்று சோ கணிக்கிறார். என்றால், "அது இரு தனி ஆள்கள் (நபர்கள்) இடையே இருக்கும் பகையின் காரணமாக நிகழும் சில்லறைச் சச்சரவுகளே என்பதைத் தமிழக மக்கள் உணரத் தொடங்கி (ஆரம்பித்து) விட்டார்கள் என்று தோன்றுகிறதாம்! (பார்க்க: துக்ளக் 15-1-87 இதழ்) எப்படி சோ அய்யாவின் சாணக்கிய மூளை மக்களின் சிந்தனைத் திறனைத் திசை திருப்புகிறது, பார்த்தீர்களா? இதுதான் பச்சைப் பார்ப்பனீயம் என்பதற்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டு.

எந்த மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள்? இவரைச் சேர்ந்த அய்யர், அய்யங்கார் இன மக்களா? அவர்கள் மட்டும் இல்லை; தமிழின மக்களும் அவ்வாறு நினைக்கிறார்கள் என்று இவர் போய் அளந்து பார்த்துக் கண்டுபிடித்தார் என்றால், இவர் கண்களுக்குப் பட்ட அம் மக்கள் இவர் இனத்துக்குப் பிறந்த இனஇரண்டகர்களாகத்தான் இருப்பார்கள் என்பதில் ஐயமிருக்க முடியாது.

'கருணாநிதி இந்தியெதிர்ப்புப் போராட்டத்தை அறிவித்தவுடன் மக்களிடையே அது பெரிய தாக்கத்தை (பாதிப்பை) ஏற்படுத்தவில்லை' என்கிறார் சோ. 'பாதிப்பு' என்பதை உணர என்ன அடையாளம் வைத்திருக்கிறார் என்பதைத் தெரிவிப்பாரா, சோ? ஒரு வேளை இவர் மொட்டை மண்டையில் கல் ஏதும் விழவில்லையே, என்பதைக் கருதி அவ்வாறு கூறியிருக்கலாம் என்று கருத வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை வர வெகு நாள்களாகா என்பதைச் சோவுக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் நேரடியாகவே எச்சரித்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மற்றும் இவரின் அந்த ஆசிரியவுரைக் கட்டுரையில் அவர் குறிப்பிட்டிருப்பவை அனைத்தும் இவர் திருகல் மூளையில் மட்டுமே தோன்றுகின்ற கருத்துகள் தாம்.

'போராட்டம் நடைபெற்ற போதும், மக்கள் மனத்தில் தி. மு. க. வினர் உயர்ந்து விடவில்லை. அக்கட்சித்தலைவர்கள் தளைப்பட்ட (கைதான) போதும், அவர்கள் ஈகம் (தியாகம்) செய்ததாகக் கருத்து (அபிப்ராயம்) வேரூன்றி விடவில்லை — என்கிறார் சோ. இவருடைய மொட்டை மண்டைக்கு மட்டும் எப்படித்தான் மக்களின் கருத்து 'பளிச் பளிச்'சென்று பட்டுவிடுகிறதோ, நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை மக்களெல்லாரும் இப்படித்தான் இருக்க வேண்டும், இருந்தால்தான் இவர் இனத்துக்கு நல்லது என்று நினைக்கிறாரோ, தெரியவில்லை.

இப்படியாக இவர் கலைஞரைப் பற்றி வெளிப்படுத்தும் கருத்து, இவர் மொழுக்கட்டை மண்டையில் தோன்றிய ஒரு கொம்பு என்றால், இதே வகையில் இதே மண்டையில் தோன்றிய இன்னொரு வகையான கொம்பையும் பாருங்களேன்.

"அவர்களைத் தளை (கைது) செய்ததை வைத்து, தமிழக முதல்வர் சட்டம், ஒழுங்கைக் காப்பதற்காக நிரம்பவும் உறுதியான நடவடிக்கை எடுத்து விட்டதாகவும் யாரும் நினைத்ததாகத் தெரியவில்லை. தளைகளை (கைதுகளை) யொட்டி ஆங்காங்கே சில வன்முறை, நிகழ்ச்சிகள் (சம்பவங்கள்) நடத்தப்பட்ட போது, அதை 'மக்கள் கொந்தளிப்பாக' நினைத்து யாரும் ஏமாறி விடவும் இல்லை. தி. மு. க. தலைவர்களுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்டபோது "ஆகா சரியான தீர்ப்பு என்று" என்று யாரும் ஏற்றுக் கொள்ளவும் (ஆமோதிக்கவும்) இல்லை; 'ஐயையோ, ஞாயமில்லை (அநியாயம்) என்று யாரும் குமுறவுமில்லை... பொதுமக்கள் அதில் பெரிதாக அக்கறை காட்டவில்லை!' — என்றெழுதுகிறது இந்தப் பார்ப்பன 'சாகிபு' மூளை! என்னே அந்த மூளையின் வல்லடி வழக்கு, பார்த்தீர்களா?

இந்த ஒரே ஆள் போதும், இவருடைய பார்ப்பன இனத்தைக் கட்டிக் காக்க. நம்மவரில் எவனுக்கும் இந்தச் சூடும் சுரணையும் இல்லை, எவர், எது, எக்கேடு கெட்டுப் போனால் எமக்கென்ன என்றுதானே நாம் அனைவருமே இருக்கிறோம்!

பொதுமக்கள் இப்போராட்டத்தில் பெரிதாக அக்கறை காட்டவில்லையாம்! சோ சொல்கிறது. இன்னும் மக்களையெல்லாம் சூத்திரர்களாகவே மதிக்கும் புராண, இதிகாச காலத்திலேயே இருப்பதாக இது நினைக்கிறதோ, என்னவோ? இவர் கூறும் பொது மக்கள் என்பவர்களில் சிறைக்குப் போன இருபத்தையாயிரம் பேர்களும் அடங்க மாட்டார்களோ? இல்லை, இவர் மதிப்பிடும் பொதுமக்கள் சீனாவிலிருந்தோ, அமெரிக்காவிலிருந்தோ, அல்லது உருசியாவிலிருந்தோ வந்து; இங்குக் குடியேறி வாழ்ந்து கொண்டிருப்பவர்களோ?, இல்லை, பொதுமக்கள் என்பவர்கள் இவரைப் போல இங்கு வந்து வாழும் ஆரிய நாடோடிக் 'கௌ'பாய்களோ? சிறைக்குப் போனவர்களைப் பார்த்தால், (அவர்கள் தி. மு. க. வைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கட்டுமே!) அவர்கள் பொதுமக்கள் ஆக மாட்டார்களோ? பொதுத் தேர்தல் என்பது இவர்களுக்கு இல்லையோ? இவர்களுக்கு ஒப்போலை உரிமை என்பது இல்லையோ? இவர் மொழுக்கை மண்டையில் உள்ள இரண்டு முட்டைக் கண்களுக்குத் தி. மு. க. வினரையோ, தமிழர் பிறரையோ பார்த்தால் மட்டும் ஏன் பொதுமக்களாகத் தெரிவதில்லை. இவர்கள் பூ(!) தேவர்கள் என்பதாலா?

இந்த அக்கரகாரத்து வாண்டு இன்னும் சொல்கிறது, கேளுங்கள்!

'முன்பெல்லாம் இம்மாதிரி நடந்திருந்தால், தமிழகத்தில் ஒரு பெருங்கூட்டம் தி மு க. வினரின் ஈகத்தை (தியாகத்தை)யும், வீரத்தையும் மெச்சியிருக்கும். மற்றொரு பெரிய கூட்டம் எம். சி ஆரின் அரச (ராஜ) தந்திரத்தையும், உறுதி மிக்க செயல்பாட்டையும் போற்றியிருக்கும். இப்படியாக இரண்டு பெரும் கூட்டங்கள் காதில் பூ வைத்துக் கொண்டு தமிழகத்தைச் சுற்றிச் சுற்றி வந்திருக்கும். இந்தத் துண்டுத்தாள் (காகித) எரிப்புப் போராட்டத்தில் (நோக்கத்தையே கொச்சைப் படுத்துகிறார்) இப

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

சென்ற இதழ்த் தொடர்ச்சி: தொடர்-3

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு செய்திச் சுருக்கம்!

(நம் சிறப்புச் செய்தியாளர் : அசென்.)

ஈரோடு பாவேந்தர் இராமலிங்கம், வாழ்வில் ஒளி விளங்க வளம் மிளிர அமைதி தவழ உரிமை மணம்கமழும் தமிழ்நாட்டை வென்றெடுப்பதொன்றே வழி என்றார்.

பல்லடம் மா. ஆறுமுகம், வள்ளுவர் வழி காட்டிச் சென்று ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் நாம் விழித்தெழாமல் வீண்மாந்தராய் இருக்கும் நிலையினை வருத்தத்துடன் சுட்டிக் காட்டினார்.

பள்ளப்பட்டி புலவர் எழில்வாணன், இளைய தலைமுறையினரை எழுச்சி பெறச் செய்வது முதன்மையானது என்றார்.

கைகாட்டிப் புதூர் ப. துரையரசன், தெளிவாகத் தெரிந்த பின்னும் செயல்படாதிருக்கும் நிலை நல்லது அன்று; விரைவில் செயல்முறைக்கு வருதல் வேண்டும் என்பதை விளக்கினார்.

ஈரோடு புலவர் வடிவேலனார், விடுதலைபெறுத தமிழ்நாட்டில் நம் அருமைத் தமிழ் மீட்சிபெற வழியே இன்றி வீழ்ச்சியடைந்து போகும் என்பதை எடுத்துரைத்து விடுதலை வேண்டுவதே மேன்மையென்றார்.

இங்ஙனமே, பற்பல கோணங்களில் பலரும் தம் கருத்துகளை முன் வைத்தனர். திருவாளர்கள், நம்மாழ்வார்பேட்டை பாலகிருட்டிணன், அரியலூர் ஆ. செ. தங்கவேல், (பெரியார் சமவுரிமைக்கழகம்), வழக்கறிஞர் மதுரை-சேரன், மயிலாடுதுறை-பிளேட்டோ, திருச்சி. கோவி. வீரமணி, வேலூர் தமிழ்ச்சேரன், புதுக்கோட்டை க. சி. விடுதலைக் குமரன், சென்னை - சிவா, தமிழ்ச்செல்வன், வந்தவாசி வெ. மாசிலாமணி, வேலூர் எ. இரவிச்சந்திரன், இராசேந்திரன், வ. வெங்கடேசன், வாலாசாப்பேட்டை சேகர், பாகூர் அரி. மஞ்சினி, மணப்பாறை சேகர் ஆகியோர் மேடையில் வந்து தம் கருத்துகளை வலியுறுத்தினர்.

தலைவரின் முடிவுரைக்குப் பின், 3-30 மணியளவில் பொதுமக்கள் கருத்தறிவிப்பரங்கு முடிவுற்றது.

அன்று பிற்பகல் அமர்வு ஒப்போலைக் கருத்தரங்காக நிகழ்ந்தது. அரங்கினுள் செல்லும்போதே ஒவ்வொருவருக்கும், ஓர் ஒப்போலைச் சீட்டு வழங்கப் பெற்றது. அதில் குறிக்கப் பெற்றிருந்த மூன்று வழிமுறைகளில் சிறந்ததெனத் தீர்மானித்த ஒன்றின் எதிரே சரிக் குறியிட்டு மேடையின் முன் வைக்கப் பெற்றிருந்த பெட்டியினுள் போட்டுவிட்டு அனைவரும் இருக்கையில் அமர்ந்தனர்.

ஒப்போலைத் தேர்வுக் கண்காணிப்பாளரான **திருச்சி திரு. இரா. பாலகங்காதரனார்** முன்னிலையில் கைகாட்டிப்புதூர் **திரு. ப. துரையரசன்**, உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர் **தென்னவன்கோ, வே. கோ. வெற்றிச்செல்வன்** ஆகியோர் எண்ணிக்கையில் ஈடுபட்டனர். **திரு மா. பூங்குன்றன்** ஒப்போலையெடுப்பின் அனைத்து நிலைகளையும் மேற்பார்வை செய்து கவனித்து வந்தார். இஃது ஒருபுறம் நிகழ்ந்திடவும், அறிஞர்கள் தம் கருத்துகளை உறுதிப்படுத்திச் சொற்பெருக்கு ஆற்றும் வகையில் உரை மேடை நிகழ்ந்தது.

திரு. அரு. கோபாலன் தலைமையேற்றார்; **திரு. மா. பொழிலன்** அரிய இக் கருத்தரங்கில் ஆர்வ மிக்கோங்கும் அன்பர்களையும் அறிஞர் பெருமக்களையும் வரவேற்று உரைநிகழ்த்தினார்.

தலைவர் அவர்கள் உரையில் நிகழ்கால ஆட்சியாளர்களின் நேர்மையற்ற போக்குகளைப் புள்ளி விளத்தங்களுடன் எடுத்துரைத்தார். எவ்வகையிலும் தமிழும் தமிழரும் முன்னேற இயலாதவாறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பெற்றிருப்பதையும், அதே நேரம் அவற்றை அடக்குமுறை என்று அறிந்து கொள்ளக் கூட இயலாத நிலையில் உணர்விழந்து போலித்தனமான விளையாட்டுகளிலும் திரைப்படம் முதலிய பிற பொழுதுபோக்குகளிலும் காலத்தை வீணடித்துவரும் தமிழனின் மிகவும் வருந்தத் தக்க நிலையினையும் சுட்டினார். உணர்வு பெறும் ஒரு நாளை உருவாக்குதல் வேண்டும் என்பதையும் அதற்கு உண்மை சான்ற தமிழர்கள் ஊறுபாடுகளையும் பொருட்படுத்தாது உழைக்க வேண்டும் எனவும் எழுச்சியூட்டும் பேருரை நிகழ்த்தினார்.

திருச்சி திரு. இரா. பாலகங்காதரனார், எப்பாடுபட்டேனும் இத் தமிழகத்தை விழிப்பித்து அடிமை மீட்சிக்குதவும் அரும் பணியினை ஆற்றியே தீர்வது என்னும் கருத்தினை வலியுறுத்திப் பேசினார்.

'திராவிட சமயம்' ஆசிரியரான முனைவர் **திரு. மு. தெய்வநாயகம்**, அறிஞர்களைப் போற்றாது புறந்தள்ளி மக்களை அறிவற்ற நிலையிலேயே, மெய்யுணர்வு என்பதே சிறிதும் இல்லாத விலங்குகளாக வைத்திருப்பதிலேயே ஆட்சியாளர்கள் கவனம் கொண்டுள்ள பான்மையினைச் சுட்டி விளக்கினார்.

நெல்லை, தனித்தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் பர். **பா. வளனரசு**, தமிழ்மொழியின் தளர்நடை நீங்கிடினும் இன்னல் சூழ்ந்த நிலையிலேயே - எந்நேரத்திலும் அழிவுக்குள்ளாகலாம் என்ற 'நேர்ச்சியை எதிர்நோக்கும்' நிலையிலேயே - இருப்பதைச் சுட்டிக் காட்டித் தமிழைக் கட்டிக் காக்க வேண்டிய கடமையுணர்வுள்ளவர்களாக மொழி உணர்வூட்டுதலைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என விளக்கிப் பேசினார்.

மயிலாடுதுறை வழக்கறிஞரும், 'தமிழின விடுதலைக் கழக'த் தலைவருமான **திரு இராமதாசு** பேசுகையில் உணர்ச்சிக் கொந்தளிப்பாய்க் காட்சியளித்தார். இத் தமிழ் மக்களை விழித்தெழச் செய்த தந்தை பெரியாரின் அரிய பெரிய முயற்சிகள் யாவற்றையும் வீணடித்து, தந்நல வேட்கைகொண்டு, விடுதலைப் பற்றுள்ள நெஞ்சங்களிடம் பறித்துண்ணும் பழியாளர்களாகி, வெறுஞ்சொல் வலைவிச்சிலும் வீண்செயல் விருப்பிலும் காலங்கழித்துப் பொறியின்பப் புன்னலத்துக்கு ஆளாகித் திரியும் புல்லர்களை எள்ளியுரைத்துச் சாடினார். பலரை அடையாளங் காட்டுவதாக அவர் பேச்சு அமைந்திருந்தது.

(தொடரும்)

'குடியரசு' நாள் நினைவு!

--பறம்பை அறிவன்.

முப்பத்தேழு ஆண்டுகள் ஆயின் என்ன? முந்நூறு ஆண்டுகளே ஆயினும் என்ன? 'குடியரசு' பற்றிய நம் கண்ணோட்டம் 'பழையபடி'யே உள்ளது. இஃதொரு சடங்காகிப் போனது.

அரசு அலுவலகம், பள்ளிக்கூடங்கள், பேராயக் கட்சி நடத்தும் குடியரசாக மட்டுமே தோன்றுகின்றது. கொடியேற்றும் நெறிமுறைகளை மீறி நடக்கும் 'விழாக்கள்' பகடிக்குரியனவாகவே உள்ளன. பேராயக்கட்சிக்காரர், அவர் 'தேசியக் கொடி'க்கும், பேராயக் கட்சிக் கொடிக்கும் 'வேறுபாடு' காண்பதில்லை!

'கொடி' நடுவில் 'சிவாசி கணேசன் படம், கை, இராசீவ் முதலியவர் படங்களைக் காண்கின்றோம். 'இந்தியத் தேசியம்' இப்படி வானோங்கிப் பறந்து கொண்டிருக்கிறது!

'அரிமாத் தமிழன் - சிங்கத் தமிழன் சிவாசி கணேசன்' பேரோடு பேராயக் கட்சியின் தமிழுணர்ச்சி ஒட்டிக் கொண்டிருப்பது ஓரளவு ஆறுதல் தருவதாகவே உள்ளது.

குடியரசுத் தலைவர் 'பிளவு பண்ணும் 'ஆற்றல்'-களை எதிர்த்து அறிக்கை விட்டுள்ளார். நாட்டைப் 'பிளவு' செய்யும் போக்கினர் 'பேராயக் கட்சி"யில் இருப்பதை அவரால் வெளிப்படையாகச் சொல்ல முடியாதன்றோ? நாம், பஞ்சாபையும், அசாமையும் கூர்க்கையும், நாகலாந்தையும்... நெஞ்சில் எண்ணிப் பேசுகிறார் குடியரசுத் தலைவர் எனக் கருதுகிறோம்! உண்மையில் 'அவலை நினைத்து உரலை இடிக்கிற' கதைதான் தலைவர்களின் அறிக்கையில் வெளிப்படுகின்றது!

குடியாட்சிக்கும், அமைதிக்கும் எதிராக நடக்கும் தலைமைகளே, குடியுரிமை பேணும்படியும், வன்முறையைக் கைவிடும்படியும் அறிக்கை விட்டு ஆட்சி புரிகின்றன!

அதிகாரிகளையும், மேலாண்மையாளரையும் 'நிறைவு' செய்வதில் அடிமைகளுக்குள் போட்டி நிலவும். அக் கூலியடிமைகளுள் ஒரு சிலர் முன்னணியில் இருப்பர். அவர்கள் உடன் பணிபுரியும் கூலிகளிடம் வட்டிக்குக் கொடுத்தும், வாயடி கையடி புரிந்தும் வாழத் தெரிந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் அதிகாரிகள்...' முதலானவர்களுக்குக் 'கையுறை' தந்து காலில் விழுவார்கள். பின்னே நிற்கும் 'அடிமைகள்' வேறு வழியின்றி அவர்களைப் பின்பற்றிக் 'கொத்தடிமை' நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இந்த நிலைமையில் 'குடியரசு' பகடிக்குரியதாகி விட்டதேயன்றி, போற்றற்குரியதாகவில்லை!

இன, மொழிச் சிக்கல், 'குடியரசு' பேசும் நாட்டில் எப்படியுள்ளது? பேராயக் கட்சியின் போராட்ட வரலாறு கூறும் உண்மை நிலைகள் எவை? அவை மொழிச்சிக்கலுக்குக் காட்டிய தீர்வு என்ன?

'விடுதலை'ப் போராட்டத்தின் போது, ஆங்கில எதிர்ப்பு, மொழிவாரி மாநிலக் கொள்கைகள் பேராயக் கட்சியில் இருந்தன. 'விடுதலை' வந்ததும் அந்தக் கொள்கையெல்லாம் காற்றோடுதான்; நேற்றோடுதான்! இன்று 'இந்தித் திணிப்'பில் பேராயக் கட்சி தீவிரமாக உள்ளது.

1948-இல் மொழிவாரி மாநிலங்கள் அமைவதைப் பேராயக்கட்சி கடுமையாக எதிர்த்தது. ஆனால், ஆந்திரம் தனியாகப் பிரிய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபின் மொழிவாரி மாநிலங்களை ஏற்படுத்த ஒப்புக் கொண்டு செயல்பட்டது.

காந்தியார் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தினார் என வாய்கிழியப் பேசும் பேராயக் கட்சியினர் கூட 'இந்தி'க்குத்தான் தமிழ்நாட்டில் முடிபுனைய முன்வருகிறார்கள்.

'வந்தே மாதரம்', 'செய்இந்து' என்ற முழக்கம் இவர்களின் 'பழையபாதை' மீதுள்ள அடிமைத் தனத்தையே காட்டும். இவர்களின் 'தாய்மொழி' ஆர்வம் தலைகுப்புறப் பாறையில் வீழ்ந்து இடித்துக் கொள்கிறது.

இந்தியா, ஆங்கிலமா? எது நம் மீது ஏறி அமர வேண்டும்? நாம் யார் காலில் விழலாம்? என்ற வினாக்களையே வலம் வந்து கொண்டிருக்கின்றனர் 'இந்தியாவிற்குப் பொதுமொழி' என்ற கண்டுபிடிப்பிற்காக!

'பொதுமொழி' மீது எதிர்காலக் கற்பனையில் மிதக்கின்றவர்கள், நடைமுறையில் 'தழிழ்' தமிழ்நாட்டில் இடம், வாய்ப்புக் கெட்டுக் கிடப்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்!

திருச்சி திருமாவளவன், "கலைஞர்' வள்ளுவர் கோட்டம்' கட்டினார். ஆனால், எம். சி. ஆர். தஞ்சை பாரதிதாசன் பல்கலைக்கழகங்கள்' கண்டுள்ளார். எனவே, தமிழ் வளர எம். சி. ஆர்.தான் அதிகம் பாடுபட்டிருக்கிறார்", என்றார். இப்படித் 'தமிழை' வளர்க்கப் பால்புட்டியோடு திரிகின்ற தலைமைகள் எப்படித் தமிழரின் உள்மனத்தை அரித்துவரும் பூச்சிகளாக உள்ளார்கள் என நினைத்துப் பார்த்திடல் வேண்டும்.

இங்கே ஒரு பால்பண்ணை ஊழியர் கூறியதை நினைவு கூர்கின்றேன். அவர் குங்குமச் சிமிழ் என்ற பொத்தகத்தில் சவீதா எழுதிய கதை பற்றிக் கூறினார். அக் கதையில் கொள்ளையடிக்கிற, களவு பண்ணுகிற ஒருவன் தான் படித்ததெல்லாம், 'காரல்மார்க்சும், இலெனின், மாஓவும்'தான் என்று கூறுகிறானாம்!

'மார்க்சியம்...' முதலிய புரட்சிக் கொள்கைகளைக் கொச்சைப்படுத்தும் 'புதினங்களை' வெளியிடுவதில் 'தமிழினத் தலைவர்' கலைஞரும் ஒருவர் எனில் நாம் நாணவே வேண்டும்!

ஒரு காலத்தில், 'முத்தாரம், முரசொலி, இன முழக்கம்..." என்று வந்த வரிசைகள் குங்குமம், சாவி எனப் போய்விட்டனவே!

'இனி' போன்ற இதழ்கள் மூலம் மார்க்சிய அறிஞர் எசு. வி. இராசதுரை தமிழினத்திற்குப் புதிய பார்வையூட்ட முயன்று வருகிறார். பண்பாட்டுச் சிதைவினையும் எழுச்சியையும் புரிந்து கொள்ள 'இனி' இதழைப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம்!

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

முன்னிதழ்த் தொடர்ச்சி

பிலிப்பைன்சு அரசியல் சூழலும் மக்களின் 'உரிமைப் மீட்புப் போராட்டமும்!

பிலிப்பைன்சு பொதுவுடைமைப் புரட்சியாளர்களும் இன விடுதலை எழுச்சியாளர்களும் இவரை ஆதரித்து அரசுப் படைகளைப் பலவிடங்களில் கடுமையாகத் தாக்கி ஓடச் செய்திருக்கிறார்கள். அகினோவுக்குப் பெரும் ஆதரவு இருப்பதால், அவர் தேர்தலில் வெற்றிபெற்றாலும் முறைகேடுகள் செய்து தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும் எனத் தீர்வு செய்து வைத்திருந்த மார்க்கோசுவைப் புறக்கணித்த மக்கள் அகினோவை வெற்றிபெறச் செய்தனர். ஆனால் மார்க்கோசு திட்டமிட்டபடி முறைகேடுகள் செய்து தானே வெற்றி பெற்றவாறு செய்து குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார்! திருவாட்டி அகினோவும் குடியரசுத் தலைவர் பொறுப்பேற்று மக்கள் முன் தோன்றி மீண்டும் மக்களே தீர்வு கூறுங்கள் எனக் கேட்டுக் கொண்டார். அதன் விளைவாக மக்கள் சினம்கொண்டு பொங்கியெழுந்து புரட்சி செய்யத் தொடங்கினார்கள். மக்கள் எழுச்சி நாளுக்கு நாள் கூடுதலாக ஆக மார்க்கோசு நாட்டைவிட்டே வெளியேற வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டார்.

மார்க்கோசுவின் வெளியேற்றமும், அகினோ ஆட்சியும்: பிலிப்பைன்சு படைத்தளபதிகள் **ஏன்றில் லீயும், ரமொசுவும்** திருவாட்டி அகினோவுக்கு ஆதரவு தெரிவித்து மார்க்கோசுவை எதிர்த்துப் படைப்புரட்சி செய்யத் தொடங்கினர். திருவாட்டி அகினோவை நாட்டின் குடியரசுத் தலைவராக வெளியறிவிப்விப்புச் செய்தார்கள். இதைப் பொறுக்க முடியாத மார்க்கோசு தன் ஆதரவுப்படையையனுப்பி இருதளபதிகளையும் தளைப்படுத்தக் கட்டளையிட்டார். ஆனால், செய்தியறிந்த நாட்டு மக்கள் 30 ஆயிரம் பேர் திரண்டு படைத்துறையை இடைமறித்துத் தடுத்து தளபதிகளைக் காத்தனர், தளபதிகள் கட்டுப்பாட்டில் இருந்த படைத்துறையினர் வானொலி நிலையம், தொலைக்காட்சி நிலையம், முகாமையான அரசு அலுவலகங்களைக் கைப்பற்றினர். இறுதியில் மார்க்கோசுவும், மனைவி இம்டெல்லாவும் நாட்டைவிட்டு வெளியேற முடிவு செய்து, அமெரிக்க அரசு ஏற்பாடு செய்திருந்த சிறப்பு 'வானூர்தியில் மக்கள் கண்களுக்குத் தென்படாமல் தப்பியோடி விட்டனர். பின்னர் நாட்டின் குடியரசுத் தலைவராக திருவாட்டி அகினோ கொரொசன் தேர்ந்தெடுக்கப் பட்டதை **அமெரிக்கா, உருசியா, இந்தியா** உள்பட உலகின் பலநாடுகள் ஏற்றுக் கொண்டன. வாழ்த்துகளும் தெரிவித்துக் கொண்டன. திருவாட்டி. அகினோ மார்க்கோசு ஆட்சியின்போது சிறைச்சாலைகளில் அடைக்கப்பெற்ற பெரும்பாலான அரசியல் தலைவர்களை விடுதலை செய்தார். மக்கள் வளமுடன் வாழ தமது அரசு அனைத்து முயற்சிகளையும் செய்யும் என மக்களுக்கு உறுதியளித்து' ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திருவாட்டி. அகினோ கொரொசன் அவர்களின் மக்களின் குடியாட்சி உரிமைப் போராட்டம் முழு வெற்றி பெற்றதை மக்களுக்கும் உலகுக்கும் உணர்த்தி, முன்னேற்றப்பாதையில் தமது ஆட்சிப் பயணத்தை தொடங்கியிருக்கும் புதிய குடியரசுத் தலைவரையும், பிலிப்பைன்சு மக்களையும் வாழ்த்திப் பாராட்டுவோம். —வியனரசு.

(முன் பக்கத் தொடர்ச்சி)

எம். சி ஆரின் 'கலைஞர் எதிர்ப்பு' கலைஞரின் எம். சி. ஆர். எதிர்ப்பு வலையைப் பின்னிக் காட்டி 'ஆரிய - மூட வழியில்' 'சோ' போன்றவர் வீழ்த்த முனையலாம். தமிழர் விழிப்புறுதல் வேண்டும்!

ஆனாலும், புரட்சியாளர் என்பவர்கள், ''அறுபதுகளுக்குப் பின் இந்திய ஆளும் வகுப்பு இந்தியைக் 'கடுமையாக'த் திணிக்கும் கொள்கையைக் கைவிட்டு விட்டது இப்போது பல்வேறு மொழிபேசும் தேசிய இனங்களைக் கொண்ட ஓர் ஆளுமை ஓர் ஆட்சியமைப்பை. அஃது ஒரு பொது மொழியின் தேவை இல்லாமலேயே உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டது'' என்கிறார்கள்! இவர்கள், தேசிய இனங்கள் சமவுரிமை பெற்று விட்டன என்று கூறி 'இந்தியப் புரட்சி'யை விழுங்கிவிடப் பார்க்கிறார்கள்! தமிழ் நாட்டில் திராவிட இயக்கக் கட்சிகளின் 'சவலை நோக்கை' வைத்து இந்தி ஆதரவை மறைமுகமாக ஏற்கும் இவர்களின் 'புரட்சி'யின் மேல் நமக்கு ஐயம் ஏற்படவே செய்யும்!

தொடர்-2

தொட்டுக்காட்டுகிறோம்! விளங்கிக் கொள்ளுங்கள்!

பதவி போனது! ஆனால் பதறல் போகவில்லை! ஊளறும் காளிமுத்தே! உன்னை நீ அறிவாய்!

தெருக்கூத்தாடிகளின் பின்னால் திரிந்தலைவதும், அவர்களின் சிறு கருவிகளைத் தூக்கிச் சுமந்து கொடுப்பதும், அவர்களிடும் ஏவல்களைக் கேட்பதும் சிற்றூர்ப் புறச் சிறுவர்களுக்கு அளவிலா மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகளாகும். அந்தச் சிறுவர்களை விடக் கீழானவர்கள் தமிழக அமைச்சர்கள் என்பதில் ஐயமில்லைதான்.

கூத்தாளர் பின்திரியும் குழுவில் ஒதுக்கப்பட்ட சிறுவன்போல், தூக்கியெறியப்பட்ட காளிமுத்துவே! உன்னை நீ அறிந்து கொள்!

இன்னும் நீ தெருவில் நிற்காதே!

நீ பிறந்த சொந்த வீட்டை இடித்துத்தள்ளி விட்டு ஊர் சுற்றுபவர் பின்னால் உன் வீட்டுப் பெரியவர்களையெல்லாம் அழைப்பதுபோல், கலைஞரை அ. தி. மு க, வுக்கு அழைக்கிறாயே! அதுவும் தி.மு க. வைக் கலைத்துவிட்டு!

காளிமுத்து...! கண் திறந்துபார்!

கூத்தாடிகளின் கூடாரங்கள் கலைக்கப்படக் கொஞ்ச நேரந்தான் உள்ளது-!

சந்தனக் குழம்பைப் பூசவேண்டிய நீ... சாய்கடைச் சேற்றில் மூழ்கலாமோ...? —குக்கீடம்.

Scanned with CamScanner

மொரீசியசு தீவில் தமிழர்கள்!

ஏறத்தாழ 270 சதுரக் கற்கள் பரப்புள்ள ஒரு சிறு தீவே 'மொரீசியசு'. தென்பெருங் கடலாகிய இந்துமா கடலில் 'மடகாசுகர்' தீவுக்குக் கிழக்கே 550 கல் தொலைவில் உள்ளது.

இத் தீவை 1507-இல் கண்டுபிடித்த போர்த்துக்கீசியர் பின்னர் அதைவிட்டு வெளியேறிவிட்டனர். 1598-இல் குடியேறிய 'டச்சு' நாட்டினரும் 1710-இல் வெளியேறி விட்டனர்.

இத் தீவு 1715-இல் பிரெஞ்சு நாட்டினர் ஆளுமையில் வளரத் தொடங்கியது. அக் கால் பிரெஞ்சு ஆளுநராக இருந்தவர் **'இலேபர்தோனைசு.'** அவரே நாவலந் தேயத்திலிருந்து கரும்பைக் கொண்டு சென்று பயிரிடச் செய்தவர். இப்போது மொரீசியசின் முதன்மையான பயிர் கரும்பே ஆகும்.

அவர் புதுச்சேரியிலிருந்து பேரளவான தொழிலாளர்களைக்-குறிப்பாகத் தச்சர்களையும் கொத்தர்களையும் - கொண்டு சென்றார். அக் கைவினைஞர்கள் செய்த அழகிய பொருள்களை 'மேகபர்க்' என்னுமிடத்திலுள்ள கடல்சார் அருங்காட்சியகத்தில் இன்றும் காணலாம்.

1810-இல் கொடுங் கடற்போர் ஒன்று நடத்தி, ஆங்கிலேயர் இத் தீவைக் கைப்பற்றினர். இப் போரில் எண்ணற்ற தமிழ் வீரர்கள் ஆங்கிலரோடு போரிட்டனர். அப்பொழுதிருந்தே இத் தீவு ஆங்கிலேயரின் குடியேற்ற நாடாகியது.

பிரெஞ்சுக்காரர் காலத்தில் தீவின் பொருளியல் வாழ்வில் மிகுதியான தமிழர்கள் பங்கு பெற்றிருந்தனர். பிரெஞ்சுச் செய்தித்தாள்கள் முகாமையான செய்திகளையும் ஏல வணிக விளம்பரங்களையும் தமிழில் வெளியிட்டு வந்ததே இதற்குச் சான்றாகும். தமிழர்களுள் வணிகரும் பெருஞ்செல்வரும் மிகுந்து இருந்தனர்.

1810க்குப்பின், தென்னிந்தியாவிலிருந்து பலர் குடியேறினர். தனியே சென்ற ஆடவர் பலர் அங்கிருந்த ஆப்பிரிக்கப் பெண்டிருடன் அல்லது பிரெஞ்சு ஆப்பிரிக்கக் கலப்பினப் பெண்டிருடன் இணைந்து வாழ்ந்தனர். அத் தமிழர்களின் மரபினரே இன்று **"கிரியோல்"** மொழிபேசும் மக்களில் பெரும்பாலோராவர்.

1834-இல் அடிமை முறை ஒழிக்கப்பட்டது; அடிமை நீங்கியவர்கள் கரும்பாலைகளில் வேலை செய்ய மறுத்தனர்; ஆலைகளை முடுமளவுக்குத் தொழிலாளர் இல்லாச் சிக்கல் கடுமைபாகியது. பிரெஞ்சு மரபினரான அந் நாட்டுத் தோட்ட முதலாளிகள் இந்தியாவை உதவி கேட்டனர், மொரீசியசை வீழ்ச்சியினின்று காப்பாற்றச் சிலரை அனுப்ப இந்தியா ஒப்புக் கொண்டது. ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் அங்கு விரைவில் சென்றனர். வீழ்ச்சியைத் தடுத்தனர்; செழிப்பை விளைத்தனர். ஆனால், இப் பெருந் தொண்டுக்கு ஊதியமாக அவர்கள் கொடுமையாக நடத்தப்பட்டனர். அவர்களைக் காத்து வழிகாட்ட யாருமே இல்லை.

இச் சிக்கலான நேரத்தில் 'டி பிலெவிட்சு' என்னும் **போலந்து** நாட்டுக்காரர் தமிழர்களுக்காக இரங்கி அவர்கள் சார்பில் கிளர்ச்சி ஒன்றைத் தொடங்கினர். அதனால் சினங்கொண்ட வெள்ளை இனமுதலாளிகள் அவரை மிகவும் துன்புறுத்தினர். 'டி பிலெவிட்சு' தமிழர்கள் சார்பில் ஆளுநருக்கு ஒரு முறையீடு செய்தார். அவருக்கு ஆங்கிலம் சரியாகத் தெரியாத்தால் அம் முறையீடு ஆங்கிலத்திலும் தமிழிலும் **இராசரத்தினம்** என்பவரால் எழுதி அளிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் மேன்மையான நேரிய உழைப்பினை மிக எளிதாகக் கருதி. அவர்களை இழிவான பெயர்க் குறியீடுகளால் அழைத்தனர் முதலாளியர். தமிழர்கள் சினந்து எழுந்ததால் அந்நிலை மாறியது.

முதல் தொழிலாளர் குழு 1835-இல் மொரீசியசை அடைந்ததாகப் புள்ளி விளத்தங்கள் கூறுகின்றன; எனினும் 1829இலேயே 1100 கூலிகள் அங்கு சென்றிருந்தனர் என்பதே உண்மை.

தொடக்கக் காலத்தில், அடக்குமுறை உச்சநிலை அடைந்தபோது போராடத் துணிந்து எழுந்தவர்கள் தமிழர்களே யாவர். **சின்னத்தம்பி** என்பவர் அவர்களுள் மிகச் சிறந்தவர் ஆவார். அவர் ஒரு பெருஞ் செல்வர்; வழக்கறிஞர். அவர் வெள்ளையர்களுக்காக வழக்குரைத்தே நிறைய ஊதியம் பெற்றிருக்க முடியும். ஆனால் தம் உடன் பிறப்புத் தமிழரின் தாழ்ச்சியை விடச் செல்வம் பெரிதன்று எனக் கருதினர்; அனைத்தையும் ஈகம் செய்தார். அவரது வினைத்திறத்திற்கு ஒரு சான்று:

அக் காலத்தில் இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் எந்த ஓர் இடத்திலிருந்தும் மற்றோர் இடத்திற்குக் கடவுச் சீட்டு (Pass) இல்லாமல் பயணம் செய்ய உரிமையற்றிருந்தனர்.

'தெரிரூகி' என்னுமிடத்தில் சின்னத்தம்பி ஒரு கோயிலைக் கட்டினர். ஒரு நூற்றாண்டுக்கு மேலாகியும் அது இன்றும் **'சின்னத்தம்பி தெக்லைசு'** என்றே வழங்கப் பெறுகிறது. அக் கோயிலின் திருநிலைப் பாட்டுத் திருநாளில் (Consecration day) தீவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தொழிலாளர்கள் திரளாக வந்திருந்தனர். பூசை நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே காவலர்கள் கோவிலினுள் புகுந்து கடவுச் சீட்டு இல்லாதவர்களைத் தளைப்படுத்தினர். காவலரின் வரம்புமீறிய செயலைக் கண்டித்தும், கோயில்கள் மதிக்கப்பட சட்டத்தில் வழி வகுக்க வேண்டும் எனவும் ஆளுநருக்கு முறையீடு செய்தார் சின்னத்தம்பி. ஆளுநர் தமிழர் கோரிக்கையின் நயன்மை அறிந்து, அதன்பின் எவரையும் தளைப்படுத்தும் பொருட்டுக் காவலர்கள் கோவிலுக்குள் செல்லக் கூடாது என உத்தரவிட்டார். அக்காலத்தில் மக்களுக்குக் குறிப்பாகத் தமிழர்க்குக் காவலர்கள் மீது குற்றஞ் சாட்டுவது பெருந்துணிச்சலுக்குரிய செயலாக இருந்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

சிறிலங்காவில் அமெரிக்கர்கள்!

ஓர் அமெரிக்க சி-123 படைத்துறை வானூர்தி சென்ற ஆண்டு நிக்கரகுவாவில் சுட்டு விழ்த்தப்பட்டது. நிக்கரகுவா அரசைக் கவிழ்ப்பதற்கு முனையும் கலகக்காரர்களுக்குப் படைக் கருவிகளைக் கொண்டு சென்ற வானூர்தி அது. வானூர்தியிலிருந்த மூவர் கொல்லப்பட்டனர். யூசின் ஏ சன் ப சு என்னும் அமெரிக்கர் உயிருடன் பிடிபட்டார்.

அது நடந்த உடனேயே, சுட்டு விழ்த்தப்பட்டது அமெரிக்க வானூர்தி அல்ல வென்றும், பிடிபட்டவர் அமெரிக்கர் அல்லரென்றும், அமெரிக்க ஆட்சி அறிக்கை விடுத்தது.

ஆனல், பின்னர் அ'து அமெரிக்கப் படைத்துறை வானூர்திதான் என்றும், பிடிபட்ட அமெரிக்கர் சிஐஏ - உளவுத் துறையைச் சேர்ந்தவர் என்றும் ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டவுடன், அமெரிக்க ஆட்சி தன் சொற்களை மென்று விழுங்க வேண்டியதாயிற்று. யாரோ அமெரிக்கர்கள் சிலர் படைத்துறை வானூர்தியை வாடகைக்கு எடுத்துச் செயல்பட்டிருக்கக் கூடும் என்றும் அரசுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றும், அமைச்சர் சூல்ட்சு சப்பைக் கட்டுக் கட்டினர்.

ஓர் அமெரிக்க வானூர்தி மற்றோர் உரிமை நாட்டின் மீது அத்து மீறிப் பறந்து, சுட்டு விழ்த்தப்பட்ட போது, தனக்கும் அதற்கும் தொடர்பில்லை என்று கூறுவது அமெரிக்க ஆட்சியினரின் அவமானமான போக்கு! அஃதாவது, கள்ளர்கள் பிடிபட்டு விட்டால், கையைக் கழுவி விடு! அவர்கள் வெற்றியடைந்தால், அவர்களுக்கு அன்பளிப்பு (சன்மானம்) வழங்கு-இது அமெரிக்கக் கொள்கை.

தற்போது "இரான்கேட்" அவதூறு, ரீகன் ஆளுமையையே உலுக்கிக் கொண்டுள்ளது. அது குறித்துப் பற்பல முகவாண்மைகள் துருவித் • துருவி உண்மைகளைக் கண்டு பிடிக்க முனைந்து செயல்பட்டு வருகின்றன

அமெரிக்கா, இரானுக்கும் படைக்கருவி உதவி அளித்து வருகிறது என்ற செய்தி வெளியானதும், முதலில் அமெரிக்கா அதனை மறுத்தது. குடியரசுத் தலைவர் ரீகன் புளுகினர். அதன் பின்னர், கருவி விற்ற அந்தப் பணம், அமெரிக்கப் பேராயத்துக்குத் தெரியாமல், நிக்கரகுவா அரசைக் கவிழ்க்கப் பயன்படுகிறது என்ற உண்மை வெளியாயிற்று. உடனே அது பற்றி அரசுக்கு ஏதும் தெரியாதென்றும், அதிகாரிகள் சிலரே அவ்வாறு செயல்பட்டனர் என்றும் கூசாமல் பொய்யுரைக்கப்பட்டது.

சீக்கிய தீவிரக்காரர்களுக்குப் பயிற்சி அளித்த காம்பர் கொடுமைச் செயல் பயிற்சிப் பள்ளி பற்றி ஏற்கனவே செய்திகள் வெளியாகியுள்ளன. அப்போதும் அமெரிக்க அரசு அது தனிப்பட்டவர்களின் உரிமை என்றும், சட்ட அடிப்படையில் அதைத் தடுப்பதற்கு வழியில்லை என்றும் கூறிற்று.

நமக்கு அது புதினமாகத் தோன்றலாம். உரிமைக் குமுகாயத்தைச் சேர்ந்த குடிமக்கள் பிற நாடுகளின் உரிமைக்கு வேட்டு வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதும், அமெரிக்கச் சட்டம் அதைத் தடுத்து நிறுத்த முடியாது.

அண்மையில் வெளியான செய்தியின்படி, அமெரிக்கக் கூலிப்படையினர் சிறிலங்காப் படையினருக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர். அந்த அமெரிக்கக் கூலிப்படை ஏற்கனவே எல்சால்வடார், அங்கோலா போன்ற இதர இடங்களிலும், ஆங்காங்கே வன்முறையாளர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து "பணி"யாற்றி வருபவர்கள்தாம். செசல்லிசு அரசைக் கவிழ்ப்பதற்குத் தென்னப்பிரிக்கா மூலம் சூழ்ச்சி செய்தவர்களும் அவர்கள்தாம்.

சிறிலங்காவில் அமெரிக்கக் கூலிப்படையினர் உள்ளனர் என்று இந்திய அதிகாரி அறிவித்தவுடன் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அதனை உடனடியாக மறுத்தது. ஆனல், உண்மைகளை முகத்திலறைந்தாற்போல அவர் முன்வைத்தவுடன், "அவ்வாறு இருக்கலாம்; ஆனல் அதற்குப் பொறுப்பு நாங்களல்ல" என்று அமெரிக்க அரசுத்துறை அறிவிக்கிறது. சொந்த முறையில், இரண்டிற்கு மேற்பட்ட எல்லைக்கடவு வைத்திருக்கும் அமெரிக்கர்கள், ஒரு வேளை சிறிலங்காவில் பணி புரியக் கூடுமாம்' அஃதாவது, அமெரிக்கக் குடிமக்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட எல்லைக்கடவு வைத்திருப்பதை - அஃதாவது, வேறொரு நாட்டுக் குடியாக ஆள் மாருட்டம் செய்வதை - அமெரிக்கச் சட்டம் அனுமதிக்கிறது! எனவே, சிறிலங்காவில், "பணி"யாற்றும் அமெரிக்கக் குடிகள், தங்களை அமெரிக்கக் குடிகள் என்று காட்டிக் கொள்ளாமல், வேறு நாட்டுக் குடிகளாக அங்கு நடமாடிக் கொண்டுள்ளனர். அதன் மூலம் அமெரிக்க அரசு தான் செய்யும் அரசியல் தில்லுமல்லை முடி மறைக்க முயல்கிறது.

இது வியப்பாக இருக்கலாம்; ஆனல் இதுவே உண்மை.

—சி. ஆர். கே

(முன் பக்கத் தொடர்ச்சி)

தது. அத் துணிவு சின்னத்தம்பி போலும் நெஞ்சுரம் பெற்றவர்க்கே இயல்வதாய் இருந்தது.

1834க்கு முன்னர் மலையப்பன் சின்னப்பிள்ளை என்னும் இந்தியாவில் பயின்ற மருத்துவர் மொரிசியசுக்கு வந்திருந்தார்; முதலில் எல்லாருக்கும் எத்தடையுமின்றி மருத்துவம் செய்ய இசைவளிக்கப்பட்டிருந்தார்; எனினும் சில காலம் கழித்து இந்தியருக்கு மட்டுமே மருத்துவம் செய்ய வேண்டும் என்று கட்டுப்படுத்தப் பட்டார்.

(தொடரும்)

கருத்தரங்கு ஒளிப்படங்கள்- ஓர் அறிவிப்பு!

அண்மையில் நடைபெற்ற 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கில் உரையாற்றியோர் அனைவரின் ஒளிப்படங்கள் விற்பனைக்கு உள்ளன. ஒரு படத்திற்கு உரு. 12 மேனி பணத்துடன் தங்கள் குறிப்புகளைக் கூறிப் பெற்றுக் கொள்ளலாம்.

—அமைச்சர், தமிழ்நிலம்.

Scanned with CamScanner

பட்டியல்—3

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு நன்கொடையாளர்பட்டியல்

	முன் மொத்தம்	7179-00
	திருவாளர்கள்	
100.	செந்தாழை ஆறிறைவன், சுவிட்சர்லாந்து,	1000-00
101.	எசு. ஆர். எசு. பிரான்சிசு, சென்னை	1000-00
102.	தென்மொழி துரை. தென்னவன், திருவொற்றியூர்	105-00

சென்னை-19. அசோக் லேலண்டு, ஊழியர்களிடம் திரட்டி அவர் வழி வந்த வரவு:

103.	மார்ட்டின்,	25-00
104.	தமிழ்வேந்தன்	25-00
105.	தமிழ்ச்செழியன்	10-00
106.	ஞானசேகரன்,	10-00
107.	சிவபெருமான்,	25-00
108.	பெ. செல்வராசு,	10-00
109.	வி. இளங்கோவன்,	10-00
110.	ப. சாந்தாராம்,	10-00
111.	ம. தென்முக நம்பி,	25-00
112.	சு. திருவாணன்,	50-00
113.	பாலசுப்பிரமணிய பாரதி,	10-00
114.	ஏழுமலை,	25-00
115.	செ. துரை,	10-00
116.	அ. மனோகரன்,	10-00
117.	வே. பொன்னுசாமி,	10-00
118.	வீ. இராமசாமி,	10-00
119.	குணசேகரன்,	10-00
120.	மு. பாண்டியன்,	10-00
121.	வி. சிவாசி,	10-00
122.	க. பெ. இராமன்,	20-00
123.	கோ. நாகராசன்,	10-00
124.	தி. இராசலிங்கம்,	10-00
125.	வி. குமரன்,	10-00
126.	கோ. இராசேந்திரன்,	10-00
127.	ஏ. நாகராசன்,	10-00
128.	சு. முருகவேள்,	25-00
129.	க. செல்வமணி,	10-00
130.	பெ. பூவரசன்,	5-00
121.	க. அடைக்கலம்,	10-00
132.	மாரிமுத்து,	10-00
133.	கலைச்செல்வன்.	5-00
134.	கண்ணதாசன்,	5-00
135.	பாசுகரன்,	5-00
136.	செ. சேகர்,	10-00
437.	சா. சௌந்தர்,	10-00
	மொத்தம்:	9754-50

(தொடரும்)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படித் தமிழக மக்கள் ஏமாறவில்லை என்பதே ஒரு நல்ல அறிகுறி.''— என்றெழுதுகிறார் சோ.

எதற்கு நல்ல அறிகுறி. இந்திராப் பேராயம் வந்து தமிழகத்தில் புகுவதற்கு எதிரிகள் இரண்டு பட்டிருக்கிறார்கள் என்பது இக் கூத்தாடிக்குக் கொண்டாட்டமாக இருக்கிறது. கட்டியங்கூறித் தில்லிக்குப் பாதக் கம்பளம் விரிக்கிறார், சோ. இவர் தாம் அன்று இந்திராவுக்கு எதிராக எழுதிக் கொண்டிருந்த கோமாளி! இவர் தாம் கனவு காண்கிறார்!, கற்பனை பண்ணி உடல் பூரிக்கிறார்! இவர் கண்டு மகிழும் கனவைப் பாருங்களேன்!

'இந்த இரு கழகங்களை விட்டு அரசியல் நடத்தத் தாங்கள் அணியமாக (தயாராக) இருப்பதாகத் தேசியக் கட்சிகள் மக்களிடையே மெய்ப்பித்தால் (நிருபித்தால்), ஆதரவு கிடைக்காமல் போகாது. மாற்றத்தை வரவேற்கத் தமிழக மக்கள் அணியமாகத் (தயாராகத்) தொடங்கி விட்டார்கள் என்பதற்கு அறிகுறிகள் தோன்றுகின்றன'' என்கிறார் இக் கட்டியங்காரக் கோமாளி!

தமிழக மக்கள் மாற்றத்துக்கு அணியமாக ஆகி விட்டார்களாம்! இந்த இரட்டைக் கொம்புப் பார்ப்பனர் சோ சொல்கிறார். இவருக்கு மட்டுமே இரட்டைக் கொம்பு இல்லை. எல்லாப் பார்ப்பனருக்குமே இரட்டைக் கொம்புகள் உண்டு. தமிழினம் தனக்குள் பிளவு பட்டு ஒன்றையொன்று பகைத்துக் கொண்டு கிடக்கும் வரை தங்களுக்கிருக்கும் இரட்டைக் கொம்புகளையும் பயன்படுத்தி இருபிரிவினரையுமே அழித்தொழிக்கத்தான் பார்ப்பார்கள் என்பதில் யாருக்குமே ஐயம் வேண்டியதில்லை. இவ்வுண்மையை வேறு யாரையும் விட, கலைஞர் கருணாநிதியும், முதலமைச்சர் ம. கோ. இராமச்சந்திரனுமே எண்ணிப் பார்க்க வேண்டும்! எண்ணுவார்களா? இதைக் கால முடிவுக்கே விட்டு விடுவோம்!

ஞாலங் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்!

சென்னை மாவட்ட உ.த.மு.க. கலந்துரையாடல் கூட்டம்!

8-2-87 ஞாயிறு காலை 10 மணியளவில் அன்று சென்னை மாவட்ட உ. த. மு. க. சார்பில், கழகத் தலைமை அலுவலகத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட அமைப்பின் பொறுப்பாளர்களும் கழக அன்பர்களுமாக ஏறத்தாழ 20 பேர் கலந்து கொண்டனர். நகரின் ஒவ்வொரு பகுதியிலும் மாதந்தோறும் ஒரு பொதுக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இயக்க இதழான 'தமிழ்நிலம்' விற்பனையை மேம்படுத்த வழிமுறைகள் ஆராயப்பட்டன. அதன்படி சென்னை நகரப் பகுதியில் விற்பனைப் பொறுப்புகள் அன்பர்களால் பகிர்ந்தெடுத்துச் கொள்ளப்பட்டன.

Scanned with CamScanner

நூல் நலம்:

நூல்: 'ஒரு சொட்டுக் கண்ணீர்' (பாத்தொகுப்பு)

ஆசிரியர்: புலவர். ப. எழில்வாணன் க.மு., கல்.இ.,
கிடைக்குமிடம்: தமிழ்வாணன்பதிப்பகம்,
11,அ. கோயில்தெரு, பள்ளப்பட்டி - 639205,
84 பக்கங்கள் : விலை உருபா. 6.

உலகின் உயிராகிய உழவனின் உயிர் ஊசலாடி உழல்கின்றது. உயர்மதி அளிக்கும் உண்மை ஆசானின் நிலை இழிவுக்குச் சான்றுயிருக்கின்றது. எழுச்சியூட்டும் தமிழ்ப்பாவலனின் நற்கருத்துகளைக் காலம் காப்பாற்றி வைத்தபோதும் கயவர்கள் போற்றிக் கொள்வதில்லை. ஈழமண்ணில் தமிழினம் குருதியாற்றில் மிதக்கின்றது. நாட்டையே நினைத்து எல்லைகாக்கும் மறவர் துயரந்தாங்கிகளாய் உள்ளனர். தமிழுக்குத் தொண்டு செய்வோர் தாங்கரும் இன்னல்களால் தவிக்கின்றனர். கடமை மறவா அரசு அதிகாரிகள் ஆசை இன்மையால் அருந்துயர் படுகின்றனர். நாட்டுக்குழைக்கும் நல்லவரும், நற்கலை வளர்க்கும் வல்லவரும் நலிந்து கிடக்கின்றனர். நன்மை உரைத்த நல்லறிஞர்களை ஞாலம் உணர்வதில்லை.

இவர்களின் நெஞ்சப் புண்களை ஆற்றிடும் மருந்தாக வாழ்வாங்கு வாழும் மக்கள் உணர்ந்து வடிக்கும் ஒரு சொட்டுக் கண்ணீரை வேண்டுகின்றார் பாவலர். இந்நூல் 'ஒரு குழுகாய மருந்து' எனலாம்.

—மருத்துவர்.

0 0 0

நூல்: குமரித் தந்தை நேசமணி (பாநடை நூல்)

ஆசிரியர்: ஞான தோமா. க. மு.,
கிடைக்குமிடம்: டி. வி அச்சகம்.
அருமனை (அஞ்) -629151. குமரி (மாவட்டம்).
142 பக்கங்கள் : விலை உருபா 5.75.

'தனக்கென முயலா நோன்றாள், பிறர்க்கென முயலுநர்' வரிசையில் தன்னிகரற்ற ஒரு தலைவர் நேசமணி. திருவிதாங்கூர்த் தமிழர் தாய்த் தமிழகத்துடன் சேர்தற் பொருட்டு, மக்கள் புரட்சியினைத் தொடர்ந்து நடத்தி வென்றவர். ஆரியப் பிடியைத் தளர்த்தி அருந்தமிழினத்தை மீட்ட மறவர். அருந்திறலும் அஞ்சாநெஞ்சமும் கொண்ட அவர் மீது பாடப் பெற்ற நூல் இது

பொறியியல் அறிஞராகிய ஞான. தோமா தமிழ் ஆர்வத்தால் தமிழ் பயின்று முதுகலைப் பட்டம் பெற்றவர். பாக்களில் யாப்பு வடிவ நலம் குறைவுதான். எனினும் அது வெளிப்படத்தோன்றா வகையில் உணர்வோட்டம் வீறு நடையிடுவது பாராட்டத்தக்கது.

இனநலம் காத்த பெரியார் நேசமணியின் தொண்டை உலகுக் குணர்த்தும் இந்நூல் போராட்ட மறவர்களால் புரிந்துவைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

—மருத்துவர்.

0 0 0

நூல்: தேசிய இன விடுதலையும் சிறுபான்மையினர் உரிமையும்

ஆசிரியர்: இரணியன்.
கிடைக்குமிடம்: யாழ் பதிப்பகம், 386, காமராசர் சாலை, உப்பிலிபாளையம் (அஞ்), கோவை 641015.
26 பக்கங்கள் : விலை உருபா. 2-00

இன விடுதலைக் கருத்தினர் அனைவரும் தெரிந்து கொண்டிருக்க வேண்டிய செய்திகளை உள்ளடக்கிய கட்டுரை இது. சிறுபான்மை இனம், அதன் இயல்பான உரிமைகள், அது நிலைபெறும் வகை, ஓரினம் நில விடுதலை கேட்பதற்குரிய தகுதிகள், இனங்கள் போராடுவதன் காரணம், அடிமைப்பட்ட இனங்களின் பொது இயல்புகள், இனங்கள் ஒடுக்கப் பெறும்போது அதன் எழுச்சி, இனத்துக்குள் உட்பகைவர்கள் ஆகிய வற்றைப் பற்றிய தெளிவான கருத்துகள் சுருக்கமாகவும் பொதுநிலையாகவும் விளக்கப் பெற்றுள்ளன

இப் பொதுச் செய்திகளின் பின்புலத்தில் இலங்கை பற்றிய சிறப்புச் செய்திகள் விளக்கப் பெறுகின்றன. 'ஈழமே தாய்த் தமிழகம்' 'தமிழ் நாடே சேய்த் தமிழகம்' என்பதும், 'ஈழத்தொல் குடியினர் தமிழரே' என்பதும் சுட்டி விளக்கப் பெற்றுள்ளன. எந்தெந்த நாடுகளில் தமிழினம் நில விடுதலை கேட்கலாம், எங்கெங்கு சிறுபான்மையினர் உரிமையுடன் வாழலாம் என்பன காரணங் காட்டி விளக்கப் பெறுகின்றன.

ஈழத் தமிழரைச் 'சிறுபான்மைத் தமிழர்' என்னும் தவறான சொல்லாட்சி, அவர்களைப் பற்றிப் பொதுமக்களில் சிலர் மேலோட்டமாக அள்ளி வீசும் கருத்துக் குழப்பங்கள், அவற்றைத் தெளிவிக்கும் வழிமுறைகள் ஆகியவை கூறப்பெற்றுள்ளன.

கட்டுரை எழுதப் பெற்றதன் நோக்கம் சிறப்பாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

—மருத்துவர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

'ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று வேண்டுமென்றே வம்பு செய்கிறது வடநாட்டு அரசு. கையைத் திருகாதே என்றால் கழுத்தைத் திருகுவோம் என்கிறது தில்லியாட்சி!

ஏறத்தாழ இருபத்தையாயிரம் பேர் சிறைக்குப் போய் இந்தியெதிர்ப்பைக் காட்டினாலும், நாங்கள் செய்வதைச் செய்து கொண்டுதான் இருப்போம் என்கிறார் இராசீவ். இன்னும் கேட்டால், மேலும் திணிப்போம் என்பதுதான் அதற்குப் பொருள்.

ஆக, இந்திதான் இந்தியா, தேசியம், ஒருமைப்பாடு- என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்கள். நாம் என்ன செய்யப் போகிறோம்? இன்னும் இந்தியையே எதிர்த்துக் கொண்டு கிடக்கப் போகிறமா? அல்லது இந்திய ஆட்சியை எதிர்ப்பமா?- இரண்டும் ஒன்றுதானே! அதற்குப் பெரிய கருவியையே கையிலெடுத்துக் கொண்டால் என்ன? தமிழர்கள் -குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். திட்டமிட்ட ஒரு பெரிய போராட்டத்திற்கு அணியமாக இருக்க வேண்டும் என்றே இக்கால் தெரிவிக்கக் கொள்ள விரும்புகிறோம்!

வேறு வழியேது?

பாவலர்- சின்னப்பனூர். கொம்மக் கோவில்.

தொடுப்பு

வேறுவழி ஏற்றவழி
ஏது சொல்லடா - முழு
விடுதலைதான் தக்கவழி
முனைந்து நில்லடா-நீ
முனைந்து நில்லடா.

கண்ணிகள் எடுப்பு

பாரினிலே நம்மடிமைத்
தன்மை ஏகிட- இந்தப்
பைந்தமிழ் நம், நாடு மீண்டும்
சொந்த மாகிட
வேருடனே துன்பமெல்லாம்
களைந்து வீசிட - கெட்ட
வேதியத்தின் கொட்டமெல்லாம்
தூசி யாகிட (வேறு)

இந்தியெனும் பரத்தைவந்த
வழியைப் பார்த்திட - நந்தம்
இன்றமிழை ஆட்சிமொழி
ஆக்கி ஆர்த்திட
சொந்தமாக நமக்கெனவோர்
அரசு கட்டிட - உலகத்
தமிழரெல்லாம் கண்டிதனை
மகிழ்வு கொண்டிட (வேறு)

தில்லிநோக்கிக் காவடிகள்
தூக்கல் நின்றிட - வடவர்
திமிர்கொழுப்புத் தலைக்கனம் அதி
காரம் சென்றிட
நல்லபடி நம்மின முன்
னேற்றம் கண்டிட - அன்று
நாமிழந்த உரிமைகளை
மீண்டும் கொண்டிட (வேறு)

இத்தரையில் நாமிழந்த
பெருமை மீட்டிட - அட
இந்தியர்நாம் இல்லைதமிழர்
என்று காட்டிட
மொத்தநலன் அத்தனையும்
சேர ஈட்டிட - உலகில்
மூத்தஇனம் நம்மினந்தான்
என்று நாட்டிட (வேறு)

(9- ஆம் பக்கத் தொடர்ச்சி)

யவை வி. பி. சிந்தனின் அறிக்கை போன்றே இருந்தன.

இதைத் தொடர்ந்து மலையாளி ஆட்சியின் கீழ் பணிபுரியும் காவல்துறை அதிகாரிகளான மலையாள மோகன்தாசு, தேவாரம் கூட்டம் போராளிகளின் கருவிகளைப் பறித்தது.

இதைப் பாராட்டி 'மலையாள மனோரமா' என்ற மலையாள இதழில் செய்தி வெளியானது.

இந் நிகழ்ச்சிகள் நம்மினம் பூணூல் வளைபத்தில் மட்டுமன்று, திரவிட மருளின் ஒரு கூறான மலையாள வளையத்திலும் சிக்கித் தவிக்கிறது என்பதைப்

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

கழக அருளாளர் :
தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன்.
பல்லடம்- மா. ஆறுமுகம்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 81 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.